முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.27.04.2026

O.S No. 138/2023

வா.சா.1- தேவநேசன் (எ) ராமநாதன் நாடார்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் இந்த வழக்கில்தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழக்கு சானல் இருப்பதாகவும் வடக்கு ரோடு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரி. 1113 என்பது ஆங்கில வருடம் 1938 என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீடு இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரி. காலி மனையாக வாங்கி என் அப்பா வீடு வைத்தார். அதில் மொத்த 16 சென்ட்டில் 7 சென்ட் வாங்கியதாக உள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தின் தமிழாக்கத்தை சரிபார்த்து சான்றொப்பம் பெறவில்லை என்றால் தெரியாது. எனக்கு மலையாளம் தெரியுமா என்றால் தெரியாது.

வா.சா.ஆ.2 முதல் 5 ஆவணங்களில் வீடு இருப்பதாகவோ கடை இருப்பதாகவோ இல்லை என்றாலும் காலிமனையாக குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 முதல் 5 ஆவணங்களில் வீடு இருப்பதாகவோ கடை இருப்பதாகவோ இல்லை என்றாலும் காலிமனையாக குறிப்பிட்டுள்ளது என்றாலும் அதனைதெரிந்து கொண்டு தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பாகபத்திரத்தில் நீண்டகரை பி கிராமம் 583/8, 583/9 உட்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ 3 முதல் 5 ஆவணங்களில் நீண்டகரை பி கிராமம் 583/9 பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

வா.சா.ஆ.6 ஆவணத்தில் நீண்டகரை பி கிராமம் 583/9 பி யில் 2.10 ஏர்ஸ்க்கு சமமான 5 சென்ட் 187 ச.லிங்க்ஸ் க்கு சொத்து வரி செலுத்தியதாக உள்ளது என்றால் சரி. அது 27.11.2015 ல் செலுத்தியதாக உள்ளது என்றால் சரி. 27.11.2015 க்கு முன்பாக 583/8,9,9 பி ஆகிய

சொத்துக்களில் எனக்கோ மற்ற வாதிகளுக்கோ உரிமை உள்ளதாக காட்டகூடிய எந்த வருமான வரி ஆவணங்களும்  தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரி. அப்பாவுநாடார் பெயரில் 7 சென்ட் சொத்து இருப்பதாக காட்டுவதற்கு எந்த வருவாய்துறை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நாங்கள் அனுபவித்து வந்ததால் ஆவணத்தை கவனிக்கவில்லை. ரீசர்வே செட்டில்மென்ட் என்பது 1971 லிருந்து 1975 க்குள் முடிவடைந்தது என்றால் சரி. 583/9 பி ல் 2.10 ஏர்ஸ் என்று என் பிராதில் நான் ஒப்பு கொண்டு சொல்லியுள்ளேன் என்றால் சரி.

எனக்கோ மற்ற வாதிகளுக்கோ 583/9 பி ல் 2.10 ஏர்ஸ் தவிர வேறு அதிகமான சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணம் என்பது 4 ம் வாதிக்கு அனுப்பபட்ட அறிவிப்பு என்றால் சரி. உதவி பொறியாளர், நீர்பாசன பிரிவு இரணியல் என்பவரால் வா.சா.ஆ.7 அனுப்பபட்டது என்றால் சரி. அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.7 அறிவிப்புக்கு 2 ம் வாதி பதில் செய்துள்ளார் என்றால் சரி. வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் 583/9 பி ல் 2.50 ஏர்ஸ்க்கு பட்டா இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உண்மையில் எங்களுக்கு 2 ½ ஏர்ஸ் உரிமை இல்லாததால் நான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.11 பட்டாவில் 2.10 ஏர்ஸ் சொத்தானது ஜெகன்மோகனதாஸ், அருள்ராஜன், ரவி மனோகரதாஸ், விக்டோரியா ஆகியோருக்கு உரிமைபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.12 புலவரைபடத்தில் 583/9 பி ல் வீடு இருப்பதாக காட்டவில்லை என்றால் சரி. உண்மையில் கட்டிடம் நாங்கள் வைத்திருந்தோம். வா.சா.ஆ.14 ஆவணத்தில் 583/9 ,9 பி க்கு உரிய வழிகாட்டி மதிப்பு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரி. வா.சா.ஆ.16

தோராய வரைபடம் இந்த வழக்கிற்காக நான் வரைந்து தாக்கல் செய்தது என்றால் சரி. அதற்கும் வருவாய்துறை ஆவணங்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரி. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி எனக்கு எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. ஆணையர் வரைபடத்தில் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 583/10, 583/18 ஆகியவை நீர்நிலைகள் என்பதால் எங்களுக்கோ மற்றவர்களுக்கோ ஆக்கிரமிப்பு செய்ய உரிமை இல்லை என்றால் சரி நான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. நான் ஆக்கிரமிப்பு செய்யாததால் அங்கிருக்கும் ஆக்கிரமிப்புகளை பிரதி அகற்ற எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி.

வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1249/2000 , 1942/2003 ஆகிய இரண்டு ஆவணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதில் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ரீசர்வே 583/8, 583/9 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி. எங்களுக்கு உரிமை இல்லாத சொத்தில் நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ரீசர்வே 583/10, 583/18 ல் நான் அனுபவம் இருப்பதாகவோ உரிமை இருப்பதாகவோ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் என் பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டேன். ரீசர்வே 583/10, 583/18 ஆகியவை அரசு புறம்போக்கு என்றால் சரியல்ல. ரீசர்வே 583/10, 583/18 ஆகியவற்றை என் பிள்ளைகளுக்கு கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

ரீசர்வே 583/10, 583/18 ஆகியவை ரோடு , ஓடை என்று அரசுக்கு சொந்தமான சொத்து என்று பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. 1938 க்கு முன்பில் இருந்தே 583/10,583/18 ரோடு மற்றும் ஓடையாக இருந்து வருகிறது

என்றால் சரி. அதில் ஆக்கிரமிப்பு ஏதேனும் இருப்பின் அதை அகற்ற எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பேச்சிபாறை அணையில் இருந்து 583/10, 583/18 கால்வாய் வழியாக நீர் வருகிறது என்றால் சரி. அந்த கால்வாய் நீரானது பலபகுதிகளுக்கும் செல்கிறது என்றால் சரி. அந்த நீர் விவசாயத்திற்காக மற்ற பகுதிக்கு செல்வதுபோல் வழக்கு சொத்திலும் வருகிறது. மற்ற நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை பிரதி அகற்றி விட்டார் என்றாலும் பொய்யான விவரங்கள் சொல்லி நான் இந்த வழக்கை தாக்கல் செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற தடை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு நீர்நிலை பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு தடை சட்டம் 2007 ன் படி எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனக்கு சொத்தில் குறைவு இருந்தால் அதனை எழுதிகொடுத்த கோபாலபிள்ளையிடம் முறையிட வேண்டும் என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் எந்த முகாந்தரமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு பிரதியின் செலவுதொகையுடம் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.